10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 02 | அதிர்வு 21 | திங்கட்கிழமை 21 மே 2018 | ethirolimedia@gmail.com | 021 224 38 18



# சதியால் சாவடைந்தோரை நினைவேந்தல் குற்றமல்ல!

யாழ்ப்பாணம், மே 21

"எமது மக்கள் தற்செயலாகச் சாகவில்லை. கொடூரமாகக் கொலை செய்யப்பட்டவர்கள். ஒரு இடத்துக்குக் கொண்டுவரப்பட்டு, சரணடைந்தால் விடுவிப்போம் என்று பல பசப்பு வார்த்தைகள் கூறி எம் மக்களைச் சதி செய்து கொன்ற நிகழ்வை நாம் நினைவில் ஏந்தாது எப்படி இருப்பது? போரில் இறந்தவர்களை நினைவு கூருவது, அவர் சாந்திக்காகப் பிரார்த்தனை செய்வதென்பதெல்லாம் சர்வதேச சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மனித உரிமைகளின் அலகுகள்" என முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

06 ▶

## ஆபத்தானவர் கோத்தா!





கொழும்பு,மே 21

இந்த நாட்டில் நியமிக்கப்பட்ட மிக மோசமான மற்றும் ஆபத்தான அரசாங்க அதிகாரி கோத்தாபய ராஜபக்ஷ என நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சர் நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

06 ▶

## பிரபாகரனின் போருக்கு அடித்தளம் அமிர்தலிங்கமே! அமைச்சர் விஜேதாச



வவுனியா,மே 21

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் போருக்கு அமிர்தலிங்கமே வித்திட்டவரென உயர் கல்வி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ

06 ▶

## வலிமையான வான், கடற்படைகள் புலிகளிடமிருந்தன ஒப்புக் கொள்கிறார் மகிந்த



கொழும்பு,மே 21

உலகில் மிகவும் ஆபத்தான கடற்படை மற்றும் விமானப் படைகளைக் கொண்ட அமைப்பாக விடுதலைப்புலிகள் இருந்தனர் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று வெளியிட்டுள்ள

06 ▶

## இழப்பீட்டு சட்டவரைபு பணி இறுதிக்கட்டத்தில்

கொழும்பு,மே 21

இழப்பீட்டுக்கான பணியகத்தை உருவாக்குவதற்கு, அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட இழப்பீட்டுச் சட்ட வரையை வரையும் பணி இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.

முன்மொழியப்படும் இந்தச் சட்டத்தின் மூலம், மூன்று பத்தாண்டு காலம் வடக்கில் நடந்த போரினால், பாதிக்கப்பட்ட, படையினர், பொலிஸார், பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்து இலங்கையர்களும், அவர்கள் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாட்டில் எந்தப்

06 ▶

## அரசியல் வழிநடத்தல் குழுவிடம் 24 இல் முதல் வரைபு கையளிப்பு

கொழும்பு,மே 21

புதிய அரசியலமைப்புத் தொடர்பான முதலாவது வரைவு, எதிர்வரும் 24ஆம் திகதி வியாழக்கிழமை, அரசியலமைப்பு வழிநடத்தல் குழுவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், வழிநடத்தல் குழு உறுப்பினர்களில் ஒருவருமான எம்.ஏ.சுமந்திரன் இதனைத் தெரிவித்துள்ளார்.

"வழிநடத்தல் குழுவுக்கு ஆலோசனை வழங்கும் நிபுணத்துவ குழுவின் இன்றைய கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகளை அடுத்து இந்த வரைவு



06 ▶

## ரயில்வே ஊழியர்கள் வேலை நிறுத்தம்

கொழும்பு,மே 21

கோரிக்கைகள் சிலவற்றை முன்வைத்து ரயில்வே ஊழியர்கள் எதிர்வரும் 23ஆம் திகதி நள்ளிரவு முதல் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

சம்பள பிரச்சினையை முன்வைத்தே இந்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

ரயில் நிலைய சமிக்ஞையாளர்கள், டிக்கற் விநியோகஸ்தர்கள், பொருட்கள் பரிசோதகர்கள் உள்ளிட்டோரும் இந்த போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

## விஞ்ஞான அறிவை மேம்படுத்த புதிய வேலைத்திட்டம்

கொழும்பு, மே 21

பாடசாலை மாணவர்களின் விஞ்ஞான அறிவை மேலும் மேம்படுத்தும்நோக்கில் கல்வி அமைச்சு புதிய வேலைத்திட்டமொன்றை முன்னெடுத்துள்ளது.

இதன் கீழ் தரம் 11ல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு விஞ்ஞான பாடத்துக்கான தகவல்கள் அடங்கிய மென்பொருள் ஒன்று அல்லது இறுவெட்டு வழங்கப்படுமென்று கல்வி அமைச்சு நூல் வெளியீட்டு ஆணையாளர் நாயகம் திருமதி பத்மினி நாலிகா வெலிவத்த தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் 1ம் திகதி விஞ்ஞான பாடங்களை கற்பிப்போர் கல்வி அமைச்சுக்கு அழைக்கப்பட்டு இது தொடர்பில் தெளிவுபடுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தலைமையில் அடுத்த மாதம் முதல் இது நடைமுறைப்படுத்தப்படும் என்றும் ஆணையாளர் நாயகம் திருமதி பத்மினி நாலிகா வெலிவத்த கூறினார்.

## மானியம் இல்லையேல் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு,மே 21

மண்ணெண்ணெய்க்கு மானியம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை முன்னெடுக்காவிட்டால் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடப் போவதாக, மீனவ சங்கம் அரசாங்கத்தை எச்சரித்துள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை முதல் பணிப்புறக்ணிப்பில் ஈடுபடப்போவதாக மீனவ சங்கம் குறிப்பிட்டுள்ளது.

மண்ணெண்ணெய் விலையேற்றத்தால் கடற்றொழிலை மேற்கொள்ளும் மீனவர்கள் சிரமங்களை எதிர்

06 ▶



## ஐ.நா. கொள்கைகளுடன் இணங்க வேண்டும் இலங்கை

கொழும்பு ,மே 21

ஐ.நா அமைதிப்படை செயற்பாடுகளில் இலங்கை தனது படைகளை ஈடுபடுத்துவதற்கு, ஐ.நாவின் கொள்கைகளுடன் இணங்க வேண்டும் என்று ஐ.நா பொதுச்செயலரின் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் மனித உரிமை ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படாமல், 49 இலங்கை

06 ▶

## கதையை மாற்றுகிறது காணாமல் போனோர் பணியகம்



கொழும்பு,மே 21

காணாமல் போனோருக்கான பணியகம் வடக்குக்கு மாத்திரமானது அல்ல மாறாக தெற்குக்கும் பொருந்தும் என பணியகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தற்போது கதையை மாற்றியுள்ளார்.

மாத்தறையில் நேற்றுமுன்தினம் காணாமல் போனோருக்கான பணியகம், காணாமல் போனவர்களின் உறவினர்களுடன் கலந்துரையாடலை நடத்தியது.

இதன்போது கருத்து வெளியிட்ட சாலிய பீரிஸ், "எந்த அரசியல் தலையீடுகளும் இல்லாமல், எமது பணிகளை நாங்கள் ஆற்றுவோம்.

1970ஆம் ஆண்டில்இருந்து நாட்டில் காணாமல் போனவர்கள் பற்றிய முறையான எந்தவொரு தரவுகளும் இல்லை.


காணாமல் போனோருக்கான பணியகம், விரிவானதொரு பட்டியலைத் தயார் செய்யும்.


நாடெங்கும், 12

06 ▶

**உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்**

# லசந்த, கீத் நொயர் வழக்குகள்: பின்னணியில் நடப்பது என்ன?





(20ஆம் திகதி தொடர்ச்சி)

அத்துடன் நொயர் கடத்தி வைக்கப்பட்ட வீட்டுக்கான வாடகையை இராணுவப் புலனாய்வுப் பிரிவின் இயக்குநர் என்கின்ற உத்தியோகபூர்வ அதிகாரத்தைப் பயன்படுத்தி கருணாசேகர செலுத்தியதாக முன்னாள் இராணுவப் புலனாய்வு அதிகாரி ஒருவர் அரச சாட்சியாக வாக்குமூலம் வழங்கியதை அடுத்தும் கருணாசேகர கைது செய்யப்பட்டார்.

கீத் நொயர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக நேசன் ஊடகத்தின் முன்னாள் ஆசிரியர் லலித் அழகக்கோன் தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து, தான் உடனடியாக உதவிப் பொலிஸ் மா அதிபர் ஜயந்த விக்கிரமரட்ன மற்றும் தேசிய புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி கபில ஹெந்தவிதாரண ஆகியோருடன் தொடர்பு கொண்டு உடனடியாக விசாரணையை ஆரம்பிக்குமாறு கட்டளையிட்டதாகவும் கோத்தபாய தெரிவித்தார்.

இவ்வாறான தொலைபேசி அழைப்புக்களைப் பெற்றவுடன் தனது கடப்பாடாக உடனடியாக விசாரணையை மேற்கொள்ளுமாறு கட்டளையிட்ட போதிலும் இது தற்போது தன்னைக் குற்றவாளியாக உருவகிப்பதற்குப் பயன்படுத்தப்படுவதாக கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.

லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை வழக்குத் தொடர்பில் சம்பந்தப்பட்ட குறித்த சில தொலைபேசி இலக்கங்கள் கிடைக்கப் பெற்ற போதிலும் இவை தொடர்பாக குற்றப் புலனாய்வுத் துறையினர் நடவடிக்கை எடுக்கவில்லை என கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.

'எமது ஆட்சியின் போது, தமிழர் ஒருவரின் ஊடாக சிம் அட்டைகளைப் பெற்றுக் கொண்ட கோப்ரல் தர இராணுவப் புலனாய்வாளர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார். இவர் தடுத்து வைக்கப்பட்ட போது அடிப்படை உரிமை விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டார். மனித உரிமைச் சட்டவாளர் திரு.வெலியமுன குறித்த சந்தேகநபர் தரப்பில் வாதிட்டு இவரைப் பிணையில் விடுவிக்க ஏற்பாடு செய்தார்' என கோத்தபாய தெரிவித்தார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலரால் குறிப்பிடப்படும் குறித்த இராணுவப் புலனாய்வாளரான லான்ஸ் கோப்ரல் கந்தேகெதர பியவன்ச, 2010 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கைது செய்யப்பட்டிருந்தார். இவர் 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் குற்றப் புலனாய்வுத் துறையினரால் நுவரெலிய பிச்சை ஜேசுதாசன் என்பவரிடமிருந்து விக்கிரமதுங்க படுகொலை வழக்குக்காகப் பயன்படுத்தப்பட்ட சிம் அட்டைகளைக் கொள்வனவு செய்திருந்தார் என்கின்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

இவர் கீத் நொயர் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புபட்ட மேஜர் புலத்வத்தவின் தலைமையிலான இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவராவார். இந்தக் குற்றச்சாட்டின் அடிப்படையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொள்ளவில்லை என ராஜபக்ச குற்றம் சுமத்தினார்.

எது எவ்வாறிருப்பினும், பியவன்ச 2010 ஆம் ஆண்உ கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட போது,கோப்ரலாக பதவி உயர்த்தப்பட்டார். இராணுவத்தினர் தொடர்ந்தும் இவருக்கான கொடுப்பனவை இராணுவ நடைமுறைகளை மீறி வழங்கியிருந்தனர். இவர் சிறையிலிருந்த போது இவரது பெயரில் இராணுவத்தினரால் பல கடன்கள் வழங்கப்பட்டிருந்தன என்பதையும் 2016 ஆம் ஆண்டு குற்றப் புலனாய்வுத் துறையினர் கண்டுபிடித்தனர்.

பியவன்சவின் அடிப்படை உரிமைகளை அவமதித்தன் பேரில் கடந்த வருடம் இவருக்கு பயங்கரவாத விசாரணைப் பிரிவின் இன்ஸ்பெக்ரர் பொகமுவவால் 100,000 ரூபா நட்டஈடாக வழங்கப்பட்டது. பியசேனவால் மேற்கொள்ளப்பட்ட குற்றங்கள் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவால் நீதிமன்றில் வாக்குமூலம் வழங்கப்பட்ட போதிலும் பியவன்ச மிகத் தீவிரமான விசாரணைக்கு உட்படுவதைத் தடுப்பதிலும் அவரை விடுவிப்பதிலும் முன்னைய அரசாங்கம் தீவிரம் காண்பித்தது.

பியவன்ச தடுத்து வைக்கப்பட்ட அதே காலப் பகுதியில் இவர் கோப்ரலாகப் பதவி உயர்த்தப் பட்டமை, இவருக்கு கடன் வழங்கப்பட்டமை மற்றும் இவரது கொடுப்பனவுகள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டமை போன்றவற்றுக்கான ஆதாரங்களை கல்கிசை நீதிவான் நீதிமன்றில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஒப்படைத்த போதிலும் இவர் சிறையிலிருந்து விடுவிக்கப்படுவது தடுக்கப் படவில்லை.கல்கிசை நீதிவான் நீதிமன்றில் பல் வேறு எழுத்து மூல அறிக்கைகளை குற்றப் புலனாய்வு அதிகாரிகள் சமர்ப்பித்ததைத் தொடர்ந்து, பாதுகாப்பு அமைச்சின் ஆதரவுடன் மேஜர் புலத்வத்த தலைமையிலான படைப்பிரிவு விக்கிரமதுங்கவின் படுகொலை வழக்கில் சம்பந்தப்பட்டிருந்தமையை உறுதிப்படுத்தப்பட்டது.

விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டு ஓராண்டின் பின்னர், இது தொடர்பான வழக்கை குற்றப் புலனாய்வுத் துறையினரிடன் இணைந்து பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் மேற்கொள்ள வேண்டும் என பாதுகாப்புச் செயலர் கோத்தபாய விரும்பியதாக ஜேர்மனியில் இருந்தவாறு வகிஸ்ர உறுதிப்படுத்தினார்.

'இந்தப் படுகொலை வழக்குடன் தொடர்புபட்ட கொலையாளிகளால் பயன்படுத்தப்பட்ட ஐந்து சிம் அட்டை இலக்கங்களை எம்மால் பெறமுடிந்தது. மருதானையில் உள்ள திரிப்போலி இராணுவப் புலனாய்வுப் பிரிவு முகாமுக்கு முன்னால் உள்ள இடத்தில் இருந்து இந்த ஐந்து தொலைபேசிகளும் மீட்கப்பட்டன' என வகிஸ்ர தெரிவித்தார். விக்கிரமதுங்கவின் படுகொலையின் பின்னணியில் சரத் பொன்சேகா உள்ளதாக தமக்குத் தகவல்கள் வழங்கப்பட்டதாகவும் வகிஸ்ர தெரிவித்தார். இது தொடர்பாக பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் பொன்சேகாவிடம் விசாரணை செய்யத் தவறியமைக்கான காரணம் என்ன என்பது தொடர்பாக வகிஸ்ரவிடம் வினவியபோது, 'இந்தப் படுகொலையை இராணுவத்தினர் செய்தமையால் 2010 ஆம் ஆண்டு பொன்சேகா மீது விசாரணையை மேற்கொள்வதற்கான போதிய சாட்சியங்களை சேகரிக்க முடியாமல் இருந்திருக்கலாம்' என அவர் பதிலளித்தார்.

கொகுவல அணியுடன் இணைந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு விக்கிரமதுங்க மற்றும் நொயர் வழக்குகளை ஆராயலாம் எனப் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் திட்டமிட்டிருக்கலாம். ஆனால், அவர்கள் போதியளவு சாட்சியங்களை ஒருபோதும் பெறமுடியவில்லை.

'நாங்கள் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் இயக்குநர் அமல் கருணாசேகரவிடம் விசாரணை நடத்தினோம். ஆனால் இவர் எம்முடன் ஒத்துழைக்கவில்லை' என வகிஸ்ர தெரிவித்தார்.

விக்கிரமதுங்கவைப் படுகொலை செய்தவர்கள் தமது தொலைபேசிகளுக்கு மீள் நிரப்புச் செய்த இடமானது திரிபோலி புலனாய்வு முகாமுக்கு அருகிலாகும். இதே முகாமிலேயே கோப்ரல் பியவன்ச உட்பட மேஜர் புலத்வத்தவின் அணியினர் தங்கியிருந்தனர். அரசாங்கம் மாறும் வரை புலத்வத்தவுக்கு எதிராகவோ அல்லது அணியினருக்கு எதிராகவோ விசாரணைகளை மேற்கொள்வதற்கு பொலிஸார் தவறியிருந்தனர்.

இறுதியில், கொழும்பில் இடம்பெற்ற புலனாய்வு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் இந்தத் தாக்குதல்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு வெளியே நேரடியாக கையாளப்பட்டதாக முன்னாள் இராணுவத் தளபதி பொன்சேகா மற்றும் குற்றப் புலனாய்வுத் துறையினர் குற்றம் சுமத்துகின்றனர்.

கொழும்பில் புலனாய்வுப் பிரிவினரின் செயற்பாடுகளுக்கு கோத்தபாய மற்றும் ஹெந்தவிதாரண உட்பட பாதுகாப்பு அதிகாரிகள் நேரடியாகக் கட்டளை வழங்கியதைத் தற்போதைய மற்றும் முன்னைய பாதுகாப்பு அதிகாரிகள் சிலர் உறுதிப்படுத்தியுள்ளனர். ஆனால், இவ்வாறான உத்தியோகபூர்வ அல்லது உத்தியோகபூர்வமற்ற கட்டளைப் பொறுப்புக்கூறல்கள் இடம்பெற்றன என்பதை கோத்தபாயவும் ஹெந்தவிதாரணவும் மறுக்கின்றனர்.

லசந்த விக்கிரமதுங்க படுகொலை வழக்கு மற்றும் கீத் நொயர் கடத்தப்பட்டமை தொடர்பில் இராணுவப் புலனாய்வாளர்கள் ஈடுபட்டுள்ளனர் என்பதை, டெய்லி மிரர் ஊடகம் தொடர்பு கொண்ட போது தற்போதைய மற்றும் முன்னாள் பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள் உறுதியாகத் தெரிவிக்கின்றனர்.

இதற்கப்பால், முன்னாள் பாதுகாப்புச் செயலர் மற்றும் முன்னாள் இராணுவக் கட்டளைத் தளபதி ஆகியோரின் மறுதலிப்புக்களில் எவை தற்போது கிடைக்கப் பெற்றுள்ள சாட்சியங்கள் மற்றும் வாக்குமூலங்களின் நம்பகத்தன்மையின் அடிப்படையில் உண்மையானவை அல்லது பொய்யானவை என்பதைக் குற்றப் புலனாய்வுத் துறையினர் மற்றும் நீதிமன்றம் தீர்மானித்துப் பதிலளிக்க வேண்டும் என்பதற்காகப் பொதுமக்கள் காத்திருக்க வேண்டியுள்ளனர்.

**வழிமூலம் :** daily mirror
**மொழியாக்கம் : நித்தியபாரதி**

எதிரொலி
Ethiroli
திங்கள், 21 மே 2018 ethirolimedia@gmail.com

## வீழ்த்தப்பட முன்னர் மீளுங்கள்

முள்ளிவாய்க்கால் நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நடந்து கொண்ட முறையும், செயற்பாடுகளும் பாரிய விமர்சனதுக்குரியவைதான். மக்களின் உணர்வுகளை அரசியலுக்காக பயன்படுத்திய அந்த செயல் கேவலமானது தான். ஆனால், விழுந்த மாட்டுக்கு குறி சுடுவதைப்போல யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் மீது திட்டமிட்ட பெரும் இணைய வன்முறையொன்று தொடர்ச்சியாக பிரயோகிக்கப் பட்டுவருவது வேறு பல சந்தேகங்களை எழுப்பியிருக்கிறது. அதிலிருந்து யாழ். பல்கலைக்கழக சமூகம் எவ்வாறு தன்னை மீள்நிறுத்தப்போகிறது என்பது பெரும் கேள்வியாக எழுந்திருக்கிறது.

பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த 18 ஆம் திகதி நிகழ்வில் எவ்வாறு தவறாக நடந்துகொண்டார்கள் அல்லது வழி நடத்தப்பட்டார்கள் என்பதிலிருந்து – அந்த தவறிலிருந்து – தங்களை உடனடியாக மீட்டெடுத்துக்கொள்ளவேண்டியது காலத்தின் தேவை. விமர்சன கீதங்களை தங்களை சுற்றி தொடர்ந்து ஒலிக்க விடுவதா அல்லது அதிலிருந்து துரிதமாக எழுந்து தங்களது ஆளுமை பண்புகளை எதிர்காலத்தில் நிரூபிப்பதா என்பதை அவர்கள் முடிவு செய்யவேண்டும்.

யாழ். பல்கலைக்கழகத்தின் பங்களிப்பானது வட மாகாணத்தின் அரசியல் – சமூக தளங்களில் கடந்த காலங்களில் ஏற்படுத்திய தாக்கங்கள் மிகவும் கனதியானவை என்பதை யாரும் மறந்துவிடமுடியாது.

ஆனால் அதன் தொடர்ச்சியாக, யாழ். பல்லைக்கழக சமூகம் இன்று அடைந்திருக்கும் புள்ளி எது?

யாழ். பல்கலைக்கழகத்தில் ஆளுமைப்பற்றாக்குறை ஏன் என்றுமில்லாதவாறு அதல பாதாளத்தில் கிடக்கிறது?

இவ்வாறு கிடப்பதினால்தான் இந்த பல்கலைக்கழக சமூகத்தினை மோட்டார் சைக்கிளில் ஏற்றி சவாரி விடுவதற்கு 'வெளிச்சக்திகள்' உன்னிக்கொண்டு நிற்கின்றன என்றாவது புரியவேண்டாமா?

போர் முடிந்த பின்னர் யாழ். பல்லைக்கழக சமூகம் சமூக – அரசியல் மாற்றங்களில் ஏற்படுத்தியிருக்கும் ஆக்கபூர்வமான பங்களிப்பு எவ்வாறு அமைந்திருக்கவேண்டும்?

போரினால் சின்னாபின்னமாகிய மக்களை மீள்நிலைப் படுத்துவதற்கு தங்களாலான சகல வளங்களையும் பயன் படுத்துவதற்கு களத்துக்கு வந்திருக்கவேண்டும்.

அதன் பின்னர், அவ்வாறு மீள்நிலைப்படுத்தப்பட்ட சமூகத்தின் இழப்புக்களை கணக்கெடுக்கும் பணியில் துரிதமாக இறங்கியிருக்கவேண்டும். அந்தப்பணியில் நாட்டின் ஏனைய பல்கலைக்கழக சமூகத்தினரையும் உள்வாங்கியிருக்கவேண்டும். அவர்களுடன் இணைந்து போரினால் வடக்கு – கிழக்கில் காணாமல்போனவர்கள் – இறந்தவர்கள் – ஊனமுற்றவர்கள் – அநாதைகளானவர்கள் என்ற பெரும் கணக்கெடுப்பை மேற்கொண்டிருக்கவேண்டும். இப்படியான பணியை முன்னெடுக்கும்போது எமது மக்களுக்கான தேவைகளுக்கு அப்பால் இனத்தின் ஒட்டுமொத்த வலி புள்ளிவிவரங்களுடன் எங்களின் கைகளில் கிடைத்திருக்கும். அந்த விவரங்கள் இணைந்து பணியாற்றிய ஏனைய பல்கலைக்கழக மாணவர்களின் ஊடாக தென்னிலங்கைக்கும் சென்று சேர்ந்திருக்கும். போரினால் ஏற்பட்ட இழப்புக்கள் தொடர்பான தெளிவான பார்வை தமிழ் மக்கள் மற்றும் சிங்கள மக்கள் மாத்திரமல்லாமல் சர்வதேச சமூகத்துக்கும்கூட சென்று சேர்ந்திருக்கும். சுருங்கக் கூறினால், எமது இனத்திற்கு ஏற்பட்ட பேரவலத்தை இலகுவாக – இலசவசமாக – நாங்கள் உலகமெல்லாம் பிரசாரம் செய்திருக்கமுடியும்.

உலகளாவிய ரீதியில் இயங்கும் பெரிய பெரிய அமைப்புக்கள் அனைத்தும் இதுபோன்ற ஆய்வுகளுக்கும் களப்பணிகளுக்கும் பல லட்சக்கணக்கான நிதியை பல்கலைக்கழகங்களுக்கு வழங்குகின்றன. பல்கலைக்கழக மாணவர்கள் தங்களது கல்வி நோக்கத்துக்காக பெற்றுக்கொள்கின்ற இந்த ஆய்வுகளை தங்களது ஆய்வுகளுக்கும் பயன்படுத்துவதற்கு அவை விரும்புகின்றன. இது சிறிலங்காவில் மாத்திரமல்ல, எல்லா நாடுகளிலும் இந்த அமைப்புக்கள் மேற்கொள்கின்ற பணி என்பது அனைவரும் அறிந்ததே. அதன்பிரகாரம், இந்த சர்வதேச அமைப்புக்கள் அரசியல் சாராத பல முக்கிய முடிவுகளை மேற்கொள்கின்றன.

இப்படியான காரியங்கள் எதையாவது யாழ். பல்கலைக் கழக சமூகம் இதுவரை முன்னெடுத்திருக்கிறதா? இது நடைபெற்றிருந்தால் இன்று அரசியல் கைதிகளினதும் – முன்னாள் போராளிகளதும் – காணாமல்போனவர்களினதும் விவரங்களுக்காக அரசியல் கட்சிகளிடம் கையேந்தி நிற்கின்ற நிலை ஏற்பட்டிருக்குமா? காணாமல்போனவர்களின் எண்ணிக்கை தொடர்பான தமிழ் மக்கள் வைத்திருக்கும் விவரத்தை விட அரசாங்கம் கணக்கெடுத்துவைத்திருக்கும் விவரம் அதிகம், அது தெரியுமா? இவ்வாறு குருடன் யானை பார்த்த கதையாக போர் முடிந்து ஒன்பது வருடங்களுக்கு பின்னரும் கோமாவில் கிடக்கின்ற தமிழ் சமூகத்தினை மீட்சியை நோக்கி கைபிடித்து அழைத்து செல்வதற்கு யாழ். பல்லைக்கழக சமூகம்கூட ஒன்றுமே செய்யவில்லைத்தானே?

சமூக மாற்றத்தையும் பெரும் புரட்சிகளின் தீர்மானிக்கும் சக்தியாகவும் பிராந்திய மக்களின் ஒன்றுபட்ட வழிகாட்டியாகவும் நேர்மையுடன் நிமிர்ந்து நின்ற யாழ். பல்கலைக்கழகத்தினை இன்று புலம்பெயர்ந்துள்ள சில "ரிமோர்ட் கொண்ட்ரோல் தளபதிகள்" உருட்டி விளையாடும்வகையில் வந்து நிற்பதற்கும்கூட – இதுதான் காரணம்.

இதிலிருந்து மீண்டால் – மீள் நினைத்தால் – வழி உண்டு.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# விக்னேஸ்வரனின் கருத்துக்கு அரசாங்கத்தின் பதில் என்ன?

## கேட்கிறார் மகிந்த



கொழும்பு, மே 21

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் தெரிவித்த கருத்துத் தொடர்பில் ஜனதிபதி, பிரதமர் பதில் வழங்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.


பேலியகொடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இராணுவ நினைவு நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் வைத்து கருத்து தெரிவித்த வட மாகாண முதலமைச்சர், கடந்த காலங்களில் இலங்கையில் போர்க்குற்றம் இடம்பெற்றதாக சுட்டிக்காட்டியிருந்தார்.

அவருடைய குறித்த கருத்துக்கு நான் எதிர்ப்பை தெரிவிக்கின்றேன். இந்த நல்லாட்சி அரசாங்கம் இந்த கருத்துத் தொடர்பில் முடிவை அறிவிக்க வேண்டும்.

மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கமும் அதனை இனப்படுகொலையாக ஏற்றுக் கொள்வது இந்த யுகத்தில் இடம்பெற்ற மிகப் பெரிய துரோகம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# சீனாவிடமிருந்து 6 விமானங்களை கொள்வனவு செய்தது இலங்கை



கொழும்பு, மே 21

சீனாவிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆறு புத்தம் புதிய PT-6 ரக பயிற்சி விமானங்கள் விமானப்படையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளன.

சீனாவின் தேசிய விமான தொழில்நுட்ப இறக்குமதி- ஏற்றுமதி நிறுவனத்திடம் இருந்து இந்த அடிப்படைப் பயிற்சி விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இலங்கை விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் கபில ஜயம்பதி கடந்த 15ஆம் திகதி, சீனாவின் நான்சாங்கில் உள்ள ஹொங்டு விமான கைத்தொழில் மையத்தில் நடந்த நிகழ்வில் இந்த விமானங்களைப் பொறுப்பேற்கும் ஆவணத்தில் கையெழுத்திட்டார்.

இந்த விமானங்கள் இலங்கை விமானப்படை அண்மையில் அறிமுகப்படுத்தியுள்ள நிறத்தைக் கொண்டதாக இருப்பதுடன், உடனடியாகப் பயன்படுத்தக் கூடிய வகையில், தயார் நிலையில் இருப்பதாகவும், இலங்கை விமானப்படை தெரிவித்துள்ளது.

இலங்கை விமானப்படையின் 1ஆம் இலக்க பயிற்சி அணியில் இந்த விமானங்கள் இடம்பெறவுள்ளதுடன், சீனக்குடாவில் உள்ள விமானப்படையின் பயிற்சி பாடசாலையில் புதிதாக சேர்த்துக் கொள்ளப்படும் விமானிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்காகப் பயன்படுத்தப் படவுள்ளன.

சுமார் 5 மில்லியன் டொலர் செலவில், ஆறு PT-6 பயிற்சி விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கு 2015ஆம் ஆண்டு இலங்கையின் தேசிய பாதுகாப்புச் சபை அனுமதி அளித்திருந்தது.

இந்த வகை விமானங்கள், சீன விமானப்படை, மற்றும் அமெரிக்கா, பாகிஸ்தான், பங்களாதேஷ் உள்ளிட்ட நாடுகளிலும் பயன்பாட்டில் உள்ளன.

ஒற்றை இயந்திரம் கொண்ட இந்த பயிற்சி விமானம், ஆரம்ப கட்ட விமானிகள் பயிற்சிக்காக பயன்படுத்தப்படுகிறது.

# செயலாளர் பதவிக்கு குறி வைத்துள்ள எஸ்.பி.



கொழும்பு, மே 21

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் பதவியை பெற்றுக் கொள்வதற்காக முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தீவிர முயற்சிகளை முன்னெடுத்து வருவதாக அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்காக அவர் அணியொன்றைத் தயார்படுத்தி வருவதுடன் அரசாங்கத்திலிருந்து விலகிய 16 பேர் அணியில் தலைவராகவும் செயற்பட்டு வருகின்றார்.

அத்துடன் ஒன்றிணைந்த எதிர்க் கட்சியில் இருக்கும் சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்பையும் இதற்காக பெற்றுக்கொள்ள திட்டமிட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது.

எதிர்வரும் மாதத்தில் நடைபெறவுள்ள கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் போது இந்த பதவியை அவர் பெற்றுக்கொள்வதற்கு முயற்சித்துள்ளார்.

# ஜனாதிபதியைத் தடுத்தது யார்?



கொழும்பு, மே 21

தாம் தெஹ்ரானுக்கு வருவதை 'அவர்கள்' தடுக்க முனைந்தார்கள் என்று, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தம்முடன் ஈரானுக்கான பயணத்தை மேற்கொண்டிருந்த ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் ஈரானுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி தெஹ்ரானில் உள்ள விடுதியில் ஓய்வாக இருந்த போதே ஊடகவியலாளர்களிடம் இதனைக் கூறினார்.

எனினும், தமக்கு அழுத்தம் கொடுத்தது கொழும்பை தளமாக கொண்ட மேற்குலக இராஜதந்திரிகளா, உள்ளூர் அதிகாரிகளா அல்லது இருதரப்பினருமா என்பதை அவர் வெளியிடவில்லை.

"எனக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது இது தான் முதல் தடவை அல்ல.

எமது நாடு இறைமையுள்ள நாடு. நாட்டுக்கு எது நல்லது என்று நாங்கள் தான் முடிவு செய்ய வேண்டும்.

ஈரானுக்குப் போகக் கூடாது என்ற கோரிக்கைகளை நான் செவி சாய்க்கவில்லை.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் கட்டாருக்குப் பயணம் மேற்கொள்ள விருந்த போதும், இதேபோன்ற அழுத்தத்தை சந்தித்தேன். அங்கு போகக் கூடாது என்று நான் கேட்கப்பட்டேன்.

அதனை நிராகரித்து விட்டு, அரசு முறைப் பயணத்தை மேற்கொண்டேன். இன்று கட்டார் அமீர் சிறிலங்காவின் நல்ல நண்பராக இருக்கிறார்.

மற்றொரு சந்தர்ப்பத்தில், கடந்த மார்ச் 22 ஆம் நாள், மூன்று நாட்கள் பயணமாக பாகிஸ்தானுக்குச் செல்ல முயன்ற போதும், எனக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது.

பாகிஸ்தானின் குடியரசு நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக பங்கேற்க விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்றுக் கொண்டிருந்தேன்.

எனது அந்த முடிவினால் சிலர் அதிர்ச்சியடைந்திருந்தனர் என்பது எனக்குத் தெரியும்.

நான் சரியான முடிவையே எடுத்தேன் என்பதில் உறுதியாக இருந்தேன்." என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## இன்று நாளும் கோளும்

21.05.2018 திங்கட்கிழமை விளம்பி வருடம் வைகாசி மாதம் 07 ஆம் நாள்

ஸப்தமி மு.ப. 02.18 வரை | ஆயில்யம் மு.ப. 02.15 வரை | குளிகை மு.ப. 01.30-03.00

இராகுகாலம் 07.30- 09.00 | சுபநேரம் காலை 06.30 - 07.30 | எமகண்டம் 10.30 - 12.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தெளிவு | களிப்பு | சினம் | அசதி | பரிவு | பாசம் | நிறைவு | வரவு | லாபம் | நலம் | பக்தி | மறதி |

எஸ்.பெருமாள் எழுதிய

# யாருக்குச் சொந்தம் இந்தக் குழந்தை யாருக்குச் சொந்தம்?

**இயல்வாணன்**

எஸ்.பெருமாள் மூத்த பத்திரிகையாளர். ஆறு தசாப்தங்களாக வீரகேசரி, ஈழநாடு, வலம்புரி, உதயன் பத்திரிகைகளில் பணியாற்றி, பல கட்டுரைகளையும், பத்திகளையும் எழுதியவர். அதற்கப்பால் இலக்கியத்தின் மீதும் அவருக்கு ஈடுபாடுள்ளது. அத்தகைய ஈடுபாட்டின் காரணமாக கவிதைகளையும், சிறுகதைகளையும் எழுதி உள்ளார். அந்த வகையில் அவரது கவிதைகள் நடந்தபடி தேடுவோம் என்ற தொகுப்பாக வெளிவந்தது. இப்போது 'யாருக்குச் சொந்தம் இந்தக் குழந்தை யாருக்குச் சொந்தம்' என்ற தலைப்பில் கவிதைகள் தொகுப்பாக்கப்பட்டுள்ளன.

இந்த நூலுக்கு மூத்த கவிஞர் சோ. பத்மநாதன் அணிந்துரை வழங்கியுள்ளார். 'இன்றைய பத்திரிகைகளிலும், முகநூலிலும் கவிதைகள் ஏற்படுத்தும் ஆயாசத்தைச் சுட்டிக் காட்டிய அவர் 'எதையாவது எழுத வேண்டும் என்ற பரபரப்பு, அவசரமின்றி தாம் கண்ட, கேட்ட, உணர்ந்தவற்றுக்குக் கலை வடிவம் கொடுத்துள்ளார். ஆற அமர இருந்து எழுதியுள்ளார்' என்று நூலாசிரியரைப் பாராட்டுகிறார்.

கவிஞர் எஸ்.பெருமாள் இந்த நூலில் இடம்பெற்றுள்ள கவிதைகளை தேசவியல், பொது இயல், சிறுவர் இயல், தமிழ் இயல், இறை இயல் என்று ஐந்து பகுதிகளாகப் பிரித்துள்ளார். அனைத்துமே ஓசைநயம் மிக்க கவிதைகள். இந்த நூலின் தலைப்பான 'யாருக்குச் சொந்தம் இந்தக் குழந்தை' இரு கவிதைகளாக பக்கம் 11 மற்றும் 42இல் உள்ளன. இருபக்கக் கவிதைகளும் சுட்டும் குழந்தைகள் வேறானவை.

வீதியின் ஓரத்தில் ஒரு மரத்தடியில்
அவன் நின்றான் அநாதரவாக
கன்னங் கரிய மேனி அணிந்திருந்த
காற்சட்டையும் வெறும் பீத்தல்




என்று ஒருவன் அறிமுகப்படுத்தப் படுகிறான். அவன் போர் தின்று துப்பிய குழந்தை. அநாதையாகத் தெருவில் அலையும் குழந்தை.

கன்னங் கருத்த மேனி
கனி போல காணுமிதழ்கள்
வெண்புறா நிகர்த்த பாதம்
வேதாந்தி போன்ற பார்வை

என்று மற்றவன் அறிமுகப்படுத்தப் படுகிறான். இவன் கண்ணன் என்ற பெயருடைய தெய்வக் குழந்தை. இந்த இரு வேறு குழந்தைகளை இந்நூலில் அறிமுகப்படுத்துவதால் நூற் தலைப்பு பொருண்மை கொண்டதாகிறது.

வெங்கொடுமைக்கு எதிரான குரலாக அவரது கவிதை மேற்கிளம்புவது தொகுதியில் விரவிக் கிடக்கிறது. அதற்கான பிழிசாறாக ஒரு கவிதை இவ்வாறு சொல்கிறது.

கொலைக் களத்தில் எத்தனை
குஞ்சு மாய நேர்ந்ததோ?
அய்யோ என்ன கொடுமைகள்
அடுக்கடுக்காய் நேர்ந்ததோ?
பொய்கள் சொல்லி உலகினை
போக்கு காட்ட முடியுமோ?
நீதி செத்துப் போகுமோ?
நீசர் தப்பிப் போவரோ?
ஆதியான தெய்வம் என்றும்
அமைதியாகத் தூங்குமோ?

சமூகத்தின் தீமைகள் சார்ந்து தனது உரத்த குரலை ஆங்காங்கு பதிவு செய்யும் கவிஞர், இயற்கை மீதான நேசிப்பினையும், பெண்கள் மற்றும் சமுதாயம் தொடர்பான தனது அபிப்பிராயங்களையும் கவிதைகளூடு பதிவு செய்கிறார்.

இறைவனை நோக்கிப் பாடும் கவிதைகளிலும் சமூக அவலத்தை கடவுளிடம் எடுத்துரைத்து நீதி கேட்கவும் அவர் தவறவில்லை.

அரசியல் முதற் கொண்டு
ஆன்மீகம் வரை எவரும்
நேர்மையாய் செயல்படுதல்
இல்லையென்ற நிலையிங்கு
நிலை பெற்று விட்டதுவே
என் செய்வேன் யான்.
எங்குற்றனை?
அங்குற்று இவைகளை யான்
எடுத்தியம்ப ஏங்குகிறேன்.

என்று ஒரு கவிதையில் சமூக நடப்பைப் பேசுகிறார். இவ்வாறே தான் கண்டுணர்ந்த விடயங்களை முழுமையான மரபுக் கவிதையாக இல்லாவிடினும், ஓசைநயம் மிக்கதாக வாசகர் உணர்ந்து அனுபவிக்கும் வண்ணம் தந்துள்ளார். அவரது ஆளுமையும், அனுபவ முதிர்ச்சியும் கவிதைகளில் துலக்கமாகத் தெரிகின்றன.

# புதிய வேதமாகுக


கருணாகரன்

நான் அழப்போவதில்லை
யாரும் யாரையும் அழ வைக்க
வேண்டியதுமில்லை
புலம்பல்களின் பாதையை மூடிச் செல்வோம்
துயரைக் கடந்ததே வீரர்களின் வழி
அதுவே அவர்களுக்கான அஞ்சலி

சாக்காட்டிடை வெந்து
துயரில் மடிந்து நாம் இற்றுப்போன
போதெங்கோ இருந்தவரெல்லாம் கூடியின்று
வருகிறார்
அலங்கரிக்கப்பட்ட ஒப்பாரிப் பாடலோடும்
சோடிக்கப்பட்ட சாவு இசையோடும்.

சாவிளைந்த நிலத்தில்
திருவிழா, பெருவிழா எல்லாம் களை பெருக்க
பிள்ளையை எண்ணிக் கதறுகிறாள் தாய்
துணையிழந்த தவிப்பில்
விம்மிச் சரிகிறாள் சகி
தாயைப் போர் பறித்தெடுக்கத்
தனித்துத்தவித்த பிள்ளைகள்
தேய்கிறார் துக்கப் பெருக்கில்.
எங்கேயென் இரத்தமும் சதையும் என்று
தேடியலைகிறான் யுகதேவன்

போர் தின்று கழித்த எச்சங்கள்
தெருவெங்கும் சிதறிக்கிடக்கிறது இன்னும்
கூட்டியள்ளித் தீ வைத்தழிக்க யாருமில்லை
இங்கே!

காயங்களைத் தோண்டிப் புதிய
புண்ணாக்கும்
கலையிற் தேர்ந்தவர்
அதிலே சிந்தும் இரத்தச் சிவப்பைக் காட்டிக்
கூவுகிறார் கூவுகிறார்
"ஆஹா, விளைந்தது பார்
கொடுமையின் காட்சி
இதோ எழுகிறது பார் யுகப்புரட்சி" என்று.
நாடகங்கள் போதுமினி

யுகமாற்றங்கள் வேண்டாமென்று
இன்னும்
துயரக் குழியுள் படுத்தேயிருப்பதா நாம்?
இது கண்ணீரைப் பெருக்கும்
விழாக்காலமல்ல
கூடி அழுது, புலம்பி, ஓலமிட்டு
துயரக் குழியில் வீழ்வது
எதிராளியின் கொலைவாளில்
தலையேற்றி மடிவதற்குச் சமம்

வீழ்ந்த நிலத்திருந்தும்
வீழ்த்தப்பட்ட களத்திலிருந்தும்
எழுந்து நிற்கிறது புல்
பூக்கிறது பட்டி
வளர்ந்து பனையாகிறது வடலி
கன்றீன்று பட்டி பெருக்குது மந்தை
அலையெறிகிறது கடல்
செழித்துப் பரிமளிக்கிறது தோட்டம்

ஏற்றிடும் சுடர்
யுக மாற்றத்திசை யுணர்த்திப்
புதிய பாதையில் ஒளிசுவற
ஒரு கீதம் இசைக்கட்டும் யாராவது
அதுவே புதிய வேதமாகக் கடவது.





சித்தாந்தன்

4.
யுகம் யுகமாய்
சிங்கத்தைப் பூஜித்தவனின் தொப்புள் கொடியில்
பூனைகள் பூக்குமொரு அதிசயம் நிகழ்ந்தது.
பூனைகள் தாம் வரித்துக் கொண்ட
கடவுளின் விக்கிரகங்களை
காவித் திரிந்தன.
மனிதர்கள் மறைவுக்கு ஒதுங்கும் இடமெல்லாம்
அவற்றை நாட்டின.
மாமிசப் பிண்டங்களைப் படைத்து
மலர் சாத்திப் பூஜித்த நாளில்
விக்கிரகங்கள் விம்மிப் புடைத்து
அழுது கேட்டன
"இந்த நிலத்தில் மனித மாமிசம் நாறா
இடமேது?"
பூனைகள் சிரித்தன.
விக்கிரகங்களிலிருந்து
சாந்தம் வடிந்து
குருதியாகப் பெருகி ஓடியது.

5.
இன்மையின் மையத்தை
தேடியலையும் பூனைகள்
இருப்பவற்றை இல்லாததாயும்
இல்லாதவற்றை இருப்பதாயும்
பாசாங்கு காட்டின.
நகங்களின் கூர்களில்
காயாத குருதிக் கறைகளை
அடிக்கடி நக்கியபடி
இல்லாதவற்றை இருப்பதாய் உணர்த்துவதில்
இல்லாத கதைகளையெல்லாம்
புனைந்து வீசின.
கதைகள் நாறி நாறி
உண்மையின் புலன்களை அடைத்தபின்
மூன்று உயிர்களைக் கோதியெடுத்த
உடலங்களைக் காட்டிலெறிந்து
இன்மையின் மையத்தில் இருப்பதாய்ச் சொல்லின
இல்லாதனவற்றை.

6.
வகுப்பறைகளின் மேசைகளில்
குந்தியிருக்கின்றன பூனைகள்.
அகங்காரத்தில் விரியும் அவற்றின் விழிகளில்
நாறிக் கிடந்தன மீன்கள்.
ஒரு வார்த்தைக்கும் ,ன்னொரு
வார்த்தைக்குமிடையில்
இற்றுப்போன வலைக்ளை விரித்தபடியிருக்கும்
அவை,
கணத்துள்
என் தோள்களில் பாய்ந்து குந்துகின்றன.
பூனைகளைப் போல மாறும்
சிறார்களிடம் நான் கேட்டேன்
'நான் யார்?'
அவர்கள் சொன்னார்கள்
'நீயும் பூனைதான்!
ஆனால் நகங்கள் மொட்டையாக ராவப்பட்ட
பூனை'
அப்போதுதான்
நான் கவனித்தேன்
என் உரோமங்கள் பூனையின் உரோமங்களாவதை.

(தொடரும்)

# காலையில் குரங்குகள் மாலையில் யானைகள்

## முத்துஐயன்கட்டு மக்கள் அவதி

கிளிநொச்சி, மே 21

இரவு வேளைகளில் காட்டு யானைகளின் தொல்லையாலும், பகல் வேளைகளில் குரங்குகளின் தொல்லையாலும் அச்சத்தின் மத்தியில் வாழ்ந்து வருவதாக முல்லைத்தீவு, முத்துஐயன்கட்டு பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

"குறித்த பிரதேசத்தில் காட்டு யானைகளின் தொல்லை மற்றும் குரங்கு தொல்லை என்பன அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன. இதனால் விவசாயிகள் உட்பட சாதாரண மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதாவது, பகல்வேளைகளில்குரங்குகளின்தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்ற நிலையில் அவை விவசாயப் பயிர்ச் செய்கைகளை அழித்துவிடுகின்றன. அத்துடன் வீடுகளுக்குள்ளும் குரங்குகள் புகுந்து சேதங்களை ஏற்படுத்துகின்றன.

இதேபோன்று மாலையானதும் ஊர் மனைகளுக்குள் வருகின்ற யானைகள் கடும் சேதங்களை ஏற்படுத்திவிட்டு செல்கின்றன. குரங்குகள் மற்றும் யானைகளால் நாம் சில நேரங்களில் உயிராபத்துக்களையும் எதிர்நோக்க வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது" என அந்தப் பகுதி மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர். (அ)



# தூக்கில் தொங்கிய காதல் ஜோடி

மட்டக்களப்பு, மே 21

வாழைச்சேனையில் காதல் ஜோடியொன்றின் சடலங்கள் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திகிலிவெட்டை கிராமத்தின் முருகன் கோயில் வீதியைச் சேர்ந்த தங்கவடிவேல் தினேஷ்குமார் மற்றும் நூலகர் வீதியைச் சேர்ந்த நாகராஜா நிரோஜினி ஆகியோரின் சடலங்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

கோராவெளி - நாவலடி ஊற்று பகுதியில் நீண்ட நேரமாக மோட்டார் சைக்கிளொன்று அநாதரவாக நிறுத்தப்பட்டிருந்ததை நோட்டமிட்ட அந்தக் காட்டுப் பகுதியில் ஆடு மேய்க்கும் பெண்ணொருவர் பிரதேச சபை உறுப்பினருக்கு அழைப்பை ஏற்படுத்தி விபரத்தைத் தெரிவித்துள்ளார். அதன் பின்னர் சம்பவ இடத்துக்கு விரைந்த பிரதேச சபை உறுப்பினரும், கிராமவாசிகளும் ஆடு மேய்க்கும் பெண்ணுமாக இணைந்து பற்றைக் காடுகள் அடர்ந்த பகுதிகளில் தேடுதலை மேற்கொண்டுள்ளனர். அப்பொழுது இரு சடலங்கள் தூங்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டுள்ளன. சடலங்களாக மீட்கப்பட்ட இருவரும் காதலர்கள் எனவும், காதலி 5 மாத கர்ப்பிணி எனவும் தெரியவந்துள்ளது. இந்த நிலையில், திருமணம் செய்து கொள்வதற்காக பெற்றோரின் அங்கீகாரம் கிடைக்கப் பெறாத நிலையில் விரக்தியுற்று இருவரும் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

சடலங்கள் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு பிரேத பரிசோதனைகளின் பின் உறவினர்களிடம் கையளிக்கப்படவுள்ளன. சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# நாங்கள் வேறு: புலிகள் வேறு

## ஜே.வி.பி ஆட்சேபம்

கொழும்பு, மே 21

விடுதலைப் புலிகள் அமைப்புடன் தம்மை ஒப்பிட்டு அமைச்சர் ராஜித சேனாரத்ன வெளியிட்ட கருத்துக்கு ஜே.வி.பி. கட்சி பெரும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக அந்தக்கட்சியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் எம்.பி. ஆங்கில ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.



"1971 ஆம் ஆண்டு தொடக்கம் நாங்கள் மக்களின் ஆதரவுடன் அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம். 1980 ஆம் ஆண்டு எமது கட்சி அன்றைய அரசாங்கத்தினால் தடை செய்யப்பட்ட போதும் பொதுமக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றிருந்தது. அன்றைய காலகட்டத்தில் கரும்புலிகள், உகுஸ்ஸா மற்றும் ப்ரா போன்ற அமைப்புகளே பயங்கரவாதிகளாக அடையாளம் காணப்பட்டிருந்தன. அந்த வகையில் ப்ரா எனும் பயங்கரவாத அமைப்பின் முக்கியஸ்தராக இருந்த அமைச்சர் ராஜித சேனாரத்ன பயங்கரவாதப் புலிகளுடன் தமது கட்சியையும் ஒப்பிட்டுப் பேசியிருப்பது அதிர்ச்சியாக இருக்கின்றது" என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# ஏக்கமுள்ளோர் நினைவை ஏந்துவர்

## கமல் அதிரடிக் கருத்து

சென்னை, மே 21

"ஏக்கம், உறவு உள்ளவர்கள் நினைவை யாவது ஏந்துவார்கள்" என மக்கள் நீதி மய்யத்தின் கட்சித் தலைவர் கமல் ஹாசன் கூறியுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் உயிரிழந்தவர்களுக்காக, நினைவேந்தல் நிகழ்ச்சி ஒன்றை சென்னை மெரினா கடற்கரையில் நடத்துவதற்கு சில பொது அமைப்புகள் அழைப்பு விடுத்துள்ள நிலையில், தமிழக உளவுப் பிரிவு பொலிஸ் ஆணையர் ஏ.கே.விஸ்வநாதன் அறிவிப்பு ஒன்றை விடுத்துள்ளார்.

"நினைவேந்தல் நிகழ்வினை பெரும்பாலான அமைப்பினர் அனுமதிக்கப்பட்ட இடங்களிலும் உள்ளரங்குகளிலும் நடத்திய போதும் சில அமைப்புகள், பொதுமக்கள் கூடும் மெரினாவில் கூடுவதாக அறிவித்துள்ளன. எனவே, யாரும் போராட்டம் என்ற பெயரில் மெரினாவில் தடையை மீறி கூடி பொதுமக்களுக்கு இடையூறு செய்யவேண்டாம். மீறி போராட்டம், ஆர்ப்பாட்டம், நினைவேந்தல் என்ற பெயரில் ஒன்று கூடும் நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் இதுகுறித்து சென்னை விமான நிலையத்தில் கமல்ஹாசனிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்குப் பதிலளித்த அவர்,

"அது பொலிஸாரின் எச்சரிக்கை. ஏக்கம், உறவு உள்ளவர்கள் நினைவையாவது ஏந்துவார்கள்." எனக் குறிப்பிட்டுள்ளார். (அ)

# மர்மக் காய்ச்சலை ஆராய விசேட குழுக்கள் விரைவு

கொழும்பு, மே 21

தென் மாகாணத்தில் பரவி வரும் மர்மக் காய்ச்சல் குறித்துப் பரிசோதனைகளை மேற்கொள்ளவென, சுகாதார அமைச்சின் தொற்று நோய் ஒழிப்பு பிரிவு அதிகாரிகள் குழுவினர், குறித்த பகுதிக்கு இன்று செல்லவுள்ளனர் என, சுகாதார சேவைப் பிரிவுப் பணிப்பாளர் வைத்தியர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

இதன்போது, குறித்த குழுவினர் காலி, மாத்தறை, கம்புருப்பிட்டிய ஆகிய பகுதிகளுக்குச் செல்லவுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

குறித்த மர்ம வைரஸ் நோய்த் தாக்கத்தின் காரணமாக, 11 சிறுவர்கள் உட்பட 13 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர். இந்நிலையில் இதனை ஆராயும் முகமாக, இதற்கு முன்னர், மருத்துவ பரிசோதனை நிறுவனம், தொற்றுநோய் ஒழிப்புப் பிரிவு என்பன குறித்த பகுதிகளில் பரிசோதனைகளை மேற்கொண்டு, அது குறித்த அறிக்கையை, சுகாதார அமைச்சிடம் கையளித்துள்ளன.

இந்த அறிக்கைக்கு அமைய, நிலைமையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில், இது குறித்து ஆராய்வதற்காகவே, சுகாதார அமைச்சின் தொற்றுநோய் ஒழிப்புப் பிரிவு அதிகாரிகள் குழுவினர், குறித்த பகுதிகளுக்கு நேரடியாக இன்று செல்லவுள்ளனர் என, அவர் குறிப்பிட்டார். (அ)

# உயர்தரப் பரீட்சை அட்டவணை இணையத்தில்!

கொழும்பு, மே 21

2018ம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான நேர அட்டவணை பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

www.doe.nev.s.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக இதனைப் பார்வையிட முடியும்.

இம்முறை இந்தப் பரீட்சைக்கு 3 இலட்சத்து 50 ஆயிரம் பேர் தோற்றவுள்ளனர். பரீட்சை ஆகஸ்ட் மாதம் 6ம் திகதி ஆரம்பமாகி செப்ரெம்பர் மாதம் 1ம் திகதி நிறைவடையும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பி.சனத் பூஜித தெரிவித்துள்ளார். (அ)

# தீ விபத்து

கொழும்பு, மே 21

தங்காலைப் பிரதேசத்திலுள்ள, ஆடைத் தொழிற்சாலையொன்றில் நேற்றுப்பிற்பகல் திடீரெனத் தீ விபத்து ஏற்பட்டது.

2 தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்துக்கு அனுப்பி, தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தத் தீ விபத்தின் போது எவ்வித உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை எனவும், ஆனால் பெருமளவான துணிகளும், ஆடைகளும் எரிந்து நாசமானதாகவும் கூறப்படுகின்றது. (அ)

# கேட்ட உடனை கெலிச்சுப் போனார். உதென்ன கதை இது?

முள்ளிவாய்க்கால் எழுச்சியைக் கண்டு வியந்து போன சம்பந்தன். அதென்ன வியந்துபோன சம்பந்தன். மக்களின்ரை தலைவன் தான் எண்டு சொல்லிப் பார்லிமென்ட் சம்பளம் எடுக்கிற உவருக்கு தமிழ் மக்களின்ரை நெஞ்சிலை என்ன இருக்கு, ஏது இருக்கு எண்டு தெரியாதோ? வியந்துபோன மைத்திரி எண்டு சொல்லலாம். இல்லாட்டி வியந்துபோன ரணில் எண்டு சொல்லலாம். இது அதை விட்டிட்டு வியந்துபோன சம்பந்தன் எண்டு தலைப்பைப் போடுறவையும் யோசிக்கிறேல்லை. இல்லாட்டி அவருக்கு ஒண்டும் தெரியாமல்தான் எல்லாம் நடக்கிது எண்டு சொல்லுறதுக்காகத்தான் போட்டிருக்கினமோ தெரியாது.

முள்ளிவாய்க்கால் இந்த முறை ஒரு புதுவிதமான விசியத்தை எல்லாருக்கும் சொல்லி இருக்கு எண்டது தான் என்ரை வியூகம். நாங்கள் ஒற்றுமையா நிக்கிறதைக் கண்டால் எதிரி எவ்வளவு பயப்பிடுவன் தெரியுமே? முந்தி எங்கடை ஊருக்கும் அயலுக்கும் ஒரு பிரச்சினை வந்திட்டிது. ஆனால் பக்கத்து ஊர்க்காரருக்கு ஒண்டும் செய்யேலாமல் போட்டுது. ஏனெண்டால் அப்ப நாங்கள் எல்லாரும் ஒற்றுமையா நிண்டனாங்கள். எப்ப நாங்கள் மற்றவையளின்ரை கைக்குள்ளை சிக்குண்டமோ? அப்ப எங்கடை எல்லாம் போவிட்டதாத்தான் எனக்குத் தெரியுது. 1983 கலவரத்துக்குப் பிறகு இந்தியா எங்களுக்கு ஒத்தாசை தரும் எண்டு நினைச்சம். அவையிட்டைப் போனதுதான் பிழையான முடிவு எண்டு இப்ப சனம் நினைச்சு வேதனைப்படுகிது.

எங்களிட்டை இருக்கிற நல்ல சக்தியள் எல்லாம் ஒண்டு சேந்தால் போதும். கெட்ட சக்தியள் தானா ஒழிஞ்சுபோம். ஒண்டு சேருறதுக்குத் தாமதப்படுத்திற ஒவ்வொரு நிமிசமும் எங்களுக்குப் பிரகண்டந்தான். கண்டிக் கலவரம் நடக்கேக்கை ஆமிப் பெரியவர் என்ன சொன்னவர் தெரியுமே? ஐயோ அவையளை அடிக்காதையுங்கோ. அவை இல்லாட்டி நாங்கள் யுத்தத்தை நடத்தி இருக்கேலாது. அவைதான் எங்களுக்கு உளவு பாத்து எல்லாத்தையும் காட்டித் தந்தவை எண்டு. அப்ப பீத்தல் எங்களுக்குள்ளைதான் இருந்திருக்கிது எண்டு தெரியுந்தானே?

அரசியல் தீர்வு, கட்சி, தலைமை எண்டு பெரிசு பெரிசாக் கதைக்கிறதை விட்டிட்டு முதலிலை நாங்கள் எங்களுக்குள்ளை ஆர் எங்கடை ஒரிஜினல்? ஆர் டுப்பிளிக்கேற்? எண்டதை அறியுங்கோ. டுப்பிளிக்கேற் ஏன் டுப்பிளிக்கேற்றா நிக்கிது எண்டு பாருங்கோ. அடி மட்டத்திலை இருந்து எல்லாத்தையும் சரி செய்ய வேண்டிக் கிடக்கு எண்டு தெரியுமெல்லே? அப்ப தீர்வு தீர்வு எண்டு கத்திக் கொண்டிராமல் முதலிலை எங்கடை பக்கத்தைப் பெலமாக்க வேணும். பெலமாக்கினால் தீர்வு தானா வரும். இது அதைவிட்டிட்டு எங்கடை சூத்தை எல்லாத்தையும் காட்டிக் கொண்டு கன்னை பிரிஞ்சு நிண்டால் எதிரிக்கு எங்களைப் பலவீனமாக்கிற வேலை சுகமெல்லே! நாங்களே தடியை எடுத்துக் குடுத்து அடி வேண்டுற மாதிரி இருக்கு மெல்லே!

நல்ல தலைமை. நல்ல இயக்கம். நல்ல செயற்பாடு எண்டு எல்லாம் சரியா இருக்குமெண்டால் எங்களுக்கு முன்னுக்கு ஒரு நாயும் துணிஞ்சு வராது. அப்ப கதைச்சு முடிப்பம் எண்டு வரேக்கை, தம்பி முந்தின மாதிரி ஏமாத்திறது சரிவராது. இன்ன இன்ன தாறன் எண்டதை எழுத்திலை தா. பிறகு நாங்கள் ஓமெண்டு சொல்லி உங்கடை வழிக்கு வாறம் எண்டு டிமான்ட் பண்ணலாம். எதையும் யோசிச்சுப் பாத்திட்டுச் செய்தால் சரிவரும். ஆனால் நேற்றைக்கு இண்டைக்குக் கட்சியிலை வந்திருந்து கொண்டு பேப்பர்காரரையும் பிழை சொல்லிக் கொண்டு நிக்கிற அரை குறையள் முடிவெடுக்க வெளிக்கிட்டால் எடுக்கிற முடிவும் அரைகுறையாத்தான் வரும்.

- வில்லங்கம் விநாசி

# தொடர்ச்சிகள்

## அரசியல்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறுதி செய்யப்பட்டு, வழிநடத்தல் குழுவிடம் வழங்கப்படும்.

இது இறுதியான வரைவு அல்ல. ஏனெனில், நிறைவேற்று அதிகார ஆட்சிமுறை மற்றும் தேர்தல் முறை உள்ளிட்ட சில விடயப் பரப்புகளில் இன்னமும் இணக்கப்பாட்டை ஏற்படுத்த வேண்டியுள்ளது." என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சதியால்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரின் வாராந்த கேள்வி பதிலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மரணித்தவர்களின் நினைவை நாம் வருடந்தோறும் ஏந்தல் எமது பாரம்பரிய வழக்கம். அநியாயமாக கொல்லப்பட்ட எமது உறவுகளின் நினைவேந்தலை நடத்துவது வழக்கமான நினைவேந்தல்களை விட முக்கியமாகத் தேவையானதொன்று.

புலிகளைத் தொடர்ந்து இக்கட்டான நிலையை ஏற்படுத்த விழைகின்றோம் என்ற கூற்று நகைப்புக்குரியது. வட கிழக்கில் எமக்கான உரித்துக்களை நாம் முன் வைத்தால் உடனே பதட்டப்படுவது கொழும்பில் உள்ள தமிழர்கள் தான். தமக்கிருக்கும் சொத்து, சுகம், வசதிகள், பதவிகள் யாவற்றையும் இழந்து விடுவோமோ என்ற பயந்தான் அவ்வாறு சிந்திக்க வைக்கின்றது.

தமிழர்கள் பரந்து வாழ்ந்த முழுநாட்டில் இருந்தும் குறிப்பாக தெற்கில் இருந்து படிப்படியாக அவர்கள் வெளியேற்றப்பட்டார்கள். தமிழர்களுக்கு எதிரான இனக் கலவரங்கள் மூலமும் புதிய புதிய சட்டங்கள் மூலமும் இதனைச் சாதித்தார்கள். எம்முட் பலர் மெல்ல மெல்ல வெளிநாடுகளுக்குச் செல்லத் தொடங்கினார்கள். இலங்கைத் தமிழர்களின் சனத்தொகை குன்றத் தொடங்கியது. யுத்தம் இந்த வெளியேற்றலைத் துரிதப்படுத்தியது. போரின் முடிவைப் பாவித்து வடகிழக்கு மாகாணங்களைத் தொடர்ந்து ஒன்பது வருடங்களாக படையினர் தம் கைவசப்படுத்தி வந்துள்ளார்கள். அவர்கள் தொடர்ந்து இங்கு இருப்பதால் வரும் பாதிப்புக்கள் பற்றி ஏற்கனவே பல தடவை கூறிவிட்டேன். உரிமைகளைக் கேட்பது இக்கட்டான நிலையை ஏற்படுத்துமானால் நாம் மௌனம் சாதிக்க வேண்டும். அவ்வாறு வாழாதிருந்தால் நாடு பூராகவும் சிங்கள பௌத்த மயமாக்கப்படும்.

புலிகள் ஏன் உண்டானார்கள்? தமிழ் மக்கள் இரண்டாந்தரப் பிரஜைகள் ஆக்கப்பட்ட பின்னரே எமது இளைஞர்கள் யுத்தம் பற்றி சிந்திக்கத் தொடங்கினார்கள்.

பிழைகளை மத்திய அரசாங்க சிங்களத் தலைவர்கள் தம் வசம் வைத்துக் கொண்டு தமிழர்களைப் பிழை கூறுவது பொருத்தமானது அன்று.

தமிழரை விரட்டி அடிக்க வேண்டும், அவர்களின் அதிகாரங்களைக் குறைக்க வேண்டும் என்று கங்கணங் கட்டிக் கொண்டு நடந்து கொண்ட சிங்கள அரசியல் தலைவர்களால்தான் நாட்டில் இக்கட்டான நிலைமை ஏற்பட்டது.

'சிங்களம் மட்டும்' என்ற போது வடக்கு கிழக்கில் தமிழ் என்றிருக்கலாம் அல்லது இடதுசாரிகள் அன்று கூறியது போல் இரு மொழிகளும் அரச கரும மொழிகளே என்று சட்டம் கொண்டு வந்திருக்கலாம். ஆகக் குறைந்தது 1958ம் ஆண்டின் பண்டாரநாயக்க - செல்வநாயகம் உடன்பாட்டையாவது நடைமுறைப்படுத்தியிருக்கலாம். எமது உரித்துக்களைப் பெறும் வரையில் நாம் போராடா விட்டால் நாம் இருந்த இடமே தெரியாமல் போய்விடும்.

1983 ஜூலைக்கு முன்னைய மாதங்களில் ஜே.ஆரின் திறந்த பொருளாதாரம் பாரிய பொருளாதாரவிருத்தியை ஏற்படுத்தியது. பல தமிழர்கள் வெளிநாடுகளில் இருந்து இலங்கை திரும்பி வணிகத்தில் ஈடுபட விரும்பினார்கள். ஆனால் நடந்தது என்ன?

ஜூலைக் கலவரம் ஏற்கனவே நல்ல நிலையில் இருந்த வணிக நிலையங்களைத் தீயிட்டு கொளுத்தியது. பொருளாதார ரீதியில் கணிசமான முன்னேற்றத்தைப் பெற்றிருந்த எமது வணிகப் பெருமக்கள் பலர் சகலதையும் இழந்து நிற்கும் ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். அவர்கள் எதற்கும் குரல் கொடுக்காதவர்கள். சும்மா இருந்தால் சுகம் பெறலாம் என்று நம்பியவர்கள்.

வடகிழக்கில் எமது காணிகள் படையினரால் கையகப் படுத்தப்பட்டுள்ளன. பல தடவைகளில் வடமாகாண சபைக்குத் தெரியாமலே இது நடந்துள்ளது. எமது காணிகளில் வெளியார் கொண்டுவரப்பட்டு குடியேற்றப்பட்டுள்ளார்கள். புதிய சிங்களக் கிராமங்கள் முளைக்கத் தொடங்கியுள்ளன. வன திணைக்களம் போன்றவை எமது மக்களைத் தாம் குடியிருக்கும் இடங்களில் இருந்து வெளியேற்றுகின்றார்கள். எமது பல்கலைக்கழகங்களில் 50வீதத்துக்கும் மேற்பட்டவர்கள் சிங்கள மாணவ மாணவியர். பல திணைக்களங்களுக்குத் தேவை நிமித்தமும் மத்திய அரசாங்கத்தின் ஏற்பாட்டின் நிமித்தமும் தென்னவர் கொண்டு வரப்பட்டுள்ளார்கள். பல ஏக்கர் காணிகள், விவசாயம், விவசாயப் பண்ணைகள் படையினர் கைவசம். மீன் பிடித்தலுக்கு வெளி மாவட்ட மீனவர்கள் படையினர் அனுசரணையுடன் குடியேற்றப்பட்டுள்ளனர்.

நடப்பவற்றைப் பார்த்தால் தமிழர்கள் வட கிழக்கில் தொடர்ந்து பெரும்பான்மையினராகக் கணிக்க முடியாத நிலையே உருவாகி வருகின்றது என முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

## ஆபத்தானவர்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் வெள்ளை வான் கலாசாரத்தை ஏற்படுத்தியதுடன் அதன்மூலம் உலகை இலங்கை பக்கம் திருப்ப காரணியாக இருந்தவர். அதேபோன்று ஊடகவியலாளர் பலரின் கடத்தல் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டமைக்கு காரணமாக இருந்தவர்.

மக்களின் பணங்களை கொள்ளையடித்து தமது பெற்றோர் நினைவாக அருங்காட்சியகங்களை அமைத்தவர். அத்துடன் சட்டவிரோதமாக ஆயுத களஞ்சியசாலைகளை வைத்திருந்து அரசுக்கு கிடைக்கும் வருமானத்தை தடுத்தவர்.

அவருக்கெதிரான வழக்குகளில் தான் ஒரு அப்பாவி என நிரூபிக்க முடியாமல் அந்த வழக்குகளிலிருந்து தன்னை கைது செய்யாமைக்காக பிரபல சட்டத்தரணிகளை நிறுத்தி அதற்கு தடையுத்தரவு வாங்கிக் கொண்டு வருகிறார்.

இவருக்கெதிராக மட்டுமல்ல ராஜபக்ச குடும்பத்துக்கெதிராகவுமே குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

மக்களை தவறாக வழிநடத்தி மீளவும் ஆட்சியை கைப்பற்ற ராஜபக்ச குடும்பம் முயற்சித்து வருகிறது. ஏனெனில் அவர்களுக்கெதிரான வழக்குகளை எதிர்கொள்ள முடியாமையே காரணமாகும். அத்துடன் மீளவும் தேசிய வளங்களை சுரண்டுவதும் அவர்களின் நோக்கமாகும். நாட்டின் மீது உண்மையான அன்பு அவர்களுக்கு இல்லை.

2019 ஆம் ஆண்டு இந்த தேசிய அரசாங்கம் பெற்ற கடனுக்கு 4.2 பில்லியனை திருப்பி செலுத்த வேண்டுமென மகிந்த தெரிவித்த குற்றச்சாட்டை மறுதலித்துள்ள மங்கள இலங்கை சுதந்திரமடைந்த 1948 ஆம் ஆண்டுக்கு பின்னர் கடந்த 2018 ஆம் ஆண்டு அரசாங்கம் மிக உயர்ந்தளவிலான கடனை மீள செலுத்தியுள்ளது. இந்தவருடம் மொத்தமாக 2845 மில்லியன் கடன் செலுத்தப்படவேண்டும். இதில் 1789 மில்லியன் வெளிநாட்டு கடனாகும். இது கூட கடந்த 2015 ஆம் ஆண்டுக்கு முதல் பெற்ற கடனாகும்.

அன்று பல ஊழல்களில் ஈடுபட்ட அவர்கள் தற்போது உள்ள ஆட்சியாளர்களை ஊழல் செய்வதாக விமர்சித்து வருகின்றமை வேடிக்கையான விடையம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஐ.நா.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் ஐ.நா அமைதிப்படையில் பணியாற்றுவதற்காக லெபனானுக்கு அனுப்பப்பட்ட விவகாரம் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

'ஐ.நாவின் கொள்கைகளுக்கு அமைய, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆய்வு நடைமுறைகளை உறுதிப்படுத்துவதில், இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து ஐ.நா பணியாற்றுகிறது.

இலங்கையில் இருந்து, மேலதிக படைப்பிரிவுகள் நிறுத்தப்படும் போது, ஐ.நாவின் இத்தகைய ஏற்பாடுகளுடன், இணங்கிப் போக வேண்டிய தேவை உள்ளது' என்றும் அவர் கூறியுள்ளார்.

## மானியம்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோக்குவதாகவும் மீனவ சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதனால் அரசாங்கம் மீனவர்களுக்கு பழைய முறையான மானிய முறையில் மண்ணெண்ணெயை வழங்க முன்வர வேண்டும். இல்லையென்றால் அரசாங்கத்துக்கு எதிராக போராட்டத்தை முன்னெடுப்பது உறுதியெனவும் அச்சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை மீனவர்களுக்கு மானிய முறையில் மண்ணெண்ணெயை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென அரசாங்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வலிமையான... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஷேட அறிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"அந்த பயங்கரவாத அமைப்புக்கு எதிராக உலகில் வேறு எந்தவொரு நாட்டுக்கும் இல்லாத தைரியத்துடன் போரிட்டோம். இந்தப் போராட்டத்தில் நாட்டு மக்கள் ஓர் அணியில் திரண்டு போருக்கு வலுச் சேர்த்தனர்.

இந்தப் போரில் முப்படையினர், பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்பு பிரிவினர் என பல்லாயிரம் பேர் உயிர்த்தியாகம் செய்தனர். இன்னும் பலர் அங்கவீனமாக்கப்பட்டனர். நாட்டு மக்களின் சுதந்திரம், வாழும் உரிமையை பெற்றுக் கொடுப்பதற்காக உயிர்த்தியாகம் செய்த அனைவரும் உயர்ந்த மனிதர்களே.

இறுதிக் கட்ட யுத்தத்தில் நாட்டு மக்களின் சுதந்திரத்துக்காக பாடுபட்ட இராணுவத்தினரும் போர்க்குற்றச் செயல்களில் ஈடுபட்டனர் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

மக்களின் வாக்குகளால் ஆட்சிக்கு வந்த அரசாங்கமும் அதனை ஏற்றுக் கொண்டு அறிக்கைகளை வெளியிடுவது மிகவும் மோசமான காட்டிக் கொடுப்பாகும்.

நாட்டுக்கு எதிராக துரோகம் செய்பவர்களும் இராணுவத்தினரைக் காட்டிக் கொடுப்பவர்களும் நாட்டினது நலனைக் கருத்திற்கொண்டு செயற்பட வேண்டும்

முள்ளிவாய்க்காலில் நடைபெற்றது இனப்படுகொலை அல்ல. நாட்டின் மக்களுக்கு சுதந்திரத்தையும் உயிர் வாழ்வதற்கான உரிமையையும் பெற்றுக் கொடுப்பதற்கு, தமது சொந்த வாழ்வை, தமது உடல் உறுப்புக்களை தியாகம் செய்து அர்ப்பணித்தவர்கள் அனைவருமே மகத்தான மனிதர்கள்.

அத்தகைய ஒரு மகத்தான மனிதாபிமான நடவடிக்கையில் ஈடுபட்ட வீரர்களை இனப்படுகொலையில் ஈடுபட்டவர்கள் போன்று, பயங்கரவாதத்தை ஆதரிப்பவர்கள் சித்தரிப்பதாகவும் அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## பிரபாகரனின்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர்,

பிரபாகரனால்கடந்தகாலங்களில்முன்னெடுக்கப்பட்ட கிளர்ச்சிகள் தென்னிலங்கையில் இருந்தவர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட கிளர்ச்சி அல்ல.

வடபுலத்தில் இருந்த பொருளாதார ஏற்றத்தாழ்வின் காரணமாக, பொருளாதாரத்தை பெருவாரியாக சுவீகரித்துக் கொண்ட ஒரு தரப்பினருக்கும், அல்லது அரசியல் தலைமைக்கும், சாதாரண மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட இடைவெளி, அல்லது பாரபட்சத்தை நீக்குவதற்காக உருவாக்கப்பட்டதாகவே, நான் கருதுகிறேன்.

எனினும் அப்போது அரசியல் தலைமை வகித்த அமிர்தலிங்கத்தின் கருத்துக்களை ஒட்டியே, 'வடக்கின் கிளர்ச்சிகள் ஒரு இனவாத கிளர்ச்சியாக, அல்லது இன ரீதியான பிரச்சினைகளாக உருவெடுத்தன. இந்த நிலையில் அமிர்தலிங்கத்தின் ஆசீர்வாதத்தோடு துப்பாக்கியை கையில் எடுத்த பிரபாகரன் பேராபத்து மிக்க தலைமைத்துவத்தின் ஊடாக வடக்கு கிழக்கில் இருந்த பல அரசியல்வாதிகளினுடைய உயிர்களை காவு கொள்ளக் காரணமாக இருந்தார்.

எனவே அப்போது இருந்த அரசியல் தலைவர்கள் தங்களது சமூகத்துக்கு பொறுப்பு கூறுவதை, அவர்களின் சுபீட்சத்துக்கு வழிசமைப்பதை விடுத்து, பயங்கரவாத தலைவரான பிரபாகரனிடம் சமூகத்தின் தலையெழுத்தை மாற்றுவதற்கான பொறுப்பை வழங்கியிருந்ததன் ஊடாக கடந்த 30 வருட காலமாக அனைவரும் பெருவாரியான இழப்புக்களையும், அழிவுகளையும் சந்தித்திக்க வேண்டி இருந்ததாகவும், அவர் தெரிவித்தார்.

## இழப்பீட்டு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் வாழ்ந்தவர்களானாலும், தமது பாதிப்புகளுக்கு இழப்பீட்டைக் கோர முடியும்.

இந்த சட்டவரைபுக்கு அமைச்சரவை கடந்த மார்ச் 6ஆம் திகதி அங்கீகாரம் அளித்தது.

இந்த வரைபை அடிப்படையாகக் கொண்டு, சட்ட மூலத்தை வரையுமாறு அரச சட்டவரைஞருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இழப்பீட்டுக்கான பணியகம் கொழும்பில் அமையும் என்று, சட்டவரைவில், முன்மொழியப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூறக் கூடிய ஐந்து பேர் கொண்ட உறுப்பின்ர்கள், இந்தப் பணியகத்துக்கு, அரசியலமைப்புச் சபையின் பரிந்துரையின் பேரில் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார்கள்.

பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களுக்கான இழப்பீடுகள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு ஏற்ற வகையில், தேவையைப் பொறுத்து, பிராந்திய, தற்காலிக, நடமாடும் பணியகங்களையும் அமைக்கும் அதிகாரமும் வழங்கப்படும்.

## கதையை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிராந்திய பணியகங்களையும், காணாமல் போனோருக்கான பணியகம் நிறுவவுள்ளது.

விசாரணை, கண்டுபிடித்தல், சாட்சிகள் பாதுகாப்பு போன்றவற்றுக்கான புதிய அலகுகளும் நிறுவப்படும்.

போரின் போது காணாமல் போன 5100 படையினர் மற்றும் பொலிஸார் உள்ளிட்ட தெற்கில் காணாமல் போனவர்கள் குறித்தும் விசாரிக்கும்." என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



# இரகசியமாக விசாரியுங்கள்

## மலேசிய முன்னாள் பிரதமரின் மனைவி மன்றாட்டம்

மலேசியா, மே 21

மலேசியா முன்னாள் பிரதமரிடம் ஊழல் வழக்குத் தொடர்பாக பொது விசாரணை நடத்த அவரது மனைவி எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

மலேசியாவில் அண்மையில் நடந்த தேர்தலில் எதிர்க்கட்சிகளின் கூட்டணி வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. மகாதிர் முகமட், புதிய பிரதமராகப் பதவியேற்றார். இதைத் தொடர்ந்து முன்னாள் பிரதமர் நஜீப் ரசாக் மீதான ஊழல் புகார்கள் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையில் கோலாலம்பூரின் பெவிலியோன் அடுக்குமாடி குடியிருப்பில் ரசாக்குக்குச் சொந்தமான 2 வீடுகளில் பொலிஸார் நேற்றுமுன்தினம் சோதனை நடத்தி 100 கிலோ தங்க கட்டிகளையும் , 171 கோடி ரூபா பெறுமதியான ரொக்கப்பணத்தையும் பறிமுதல் செய்தனர்.

இதுதொடர்பாக ஊழல் தடுப்பு ஆணையத்தில் வரும் 22 ஆம் திகதி ரசாக் ஆஜராகி விளக்கம் அளிக்க வேண்டும் என்று அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. இந்த நிலையில் நஜீப் ரசாக்கிடம் பொது விசாரணை நடத்துவதற்கு அவரது மனைவி ரோஸ்மா மன்சோர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். அவர் கூறும்போது, “எந்த விசாரணைக்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம். முழு ஒத்துழைப்பும் கொடுக்கிறோம். ஆனால் இந்த விசாரணை இரகசியமாக நடைபெறவேண்டும். பொது விசாரணை நடத்த அவசரம் காட்டக் கூடாது. எங்கள் வீட்டில் சோதனை நடைபெற்ற போது சமூக வலைத்தளங்களில் இந்தச் செய்திகள் பெருமளவில் பரவின. எனவே விசாரணை இரகசியமாக நடக்க வேண்டும்” என்று தெரிவித்துள்ளார். (அ)

# வர்த்தகப் போர் முடிவுக்கு வந்தது

பீஜிங், மே 21

சீனாவில் இருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யும் பொருள்களுக்கு அதிகமாக வரியை விதித்தார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப். இதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக, அமெரிக்காவில் இருந்து இறக்குமதியாகும் 128 பொருட்களுக்கு சீனா 25 சதவீதம் வரி விதித்திருந்தது.

சீனா விதித்த இந்த கூடுதல் வரி காரணமாக சீனா - அமெரிக்கா உறவில் பிரச்சினை நிலவி வந்தது.

இந்நிலையில் அமெரிக்க உடனான வர்த்தக ப்போரை கைவிடுவதாகச் சீனாவின் துணை பிரதமர் லியூ கி தெரிவித்துள்ளார். இரண்டு நாள்களுக்கு முன்னர் சீனப் பிரதிநிதிகள் அமெரிக்க அதிபர் ட்ரம்பை நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். இதனைத் தொடர்ந்து வர்த்தகப் போரை முடிவுறுத்தும் அறிவிப்பை சீனா வெளியிட்டுள்ளது. இரு நாடுகளிடையே நிலவி வந்த வர்த்தக பிரச்சினைகள் முடிவுக்கு வந்ததை அடுத்து அமெரிக்காவில் இருந்து கூடுதல் பொருட்களை இறக்குமதி செய்ய சீனா முடிவு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார் (அ)

# கறுப்புப் பெட்டி கண்டுபிடிப்பு



கியூபா, மே 21

கியூபாவில் 110 பேரை பலிகொண்ட விமான விபத்தில் இரண்டு கறுப்புப் பெட்டிகளில் ஒரு கறுப்புப் பெட்டி கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கியூபாவில் கடந்த வெள்ளிக் கிழமை பயணிகள் விமானம் ஒன்று விழுந்து நொறுங்கியதில் 110 பேர் பரிதாபமாகப் பலியாகினர். கடந்த 30 வருடங்களில் கியூபாவில் நடந்த மிகப் பெரிய விபத்தாக இது பார்க்கப்படுகிறது.

இந்த விபத்துக்கான காரணம் குறித்துத் தெரியவில்லை எனவும், தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் விமானத்தில் இருந்த இரண்டு கறுப்புப் பெட்டிகளில் ஒரு கறுப்புப் பெட்டி கண்டுபிடிக்கப்பட்டுவிட்டதாகவும், அது நல்ல நிலையில் இருப்பதாகவும், இன்னும் ஒரு பெட்டியைத் தேடிவருவதாகவும் அங்கிருக்கும் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கறுப்புப் பெட்டியில்விமானத்தின் அனைத்துத் தகவல்களும் இருக்கும் என்றும் கூறப்படுகிறது. (அ)

# 8 மாவட்டங்களில் மண்சரிவு அபாயம்



கொழும்பு, மே 21

மழையுடனான வானிலை தொடர்வதன் காரணமாக 8 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி, நுவரெலியா, பதுளை, காலி, குருநாகல் மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களிலேயே மண்சரிவு அபாயம்காணப்படுவதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

அத்துடன் அம்பலாங்கொடை பிரதேசத்தில் உள்ள வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து விழுந்ததில், வீடு முற்றாக சேதமடைந்துள்ளது. குறித்த வீட்டில் மூவர் இருந்துள்ளபோதிலும், குறித்த மூவரும்தெய்வாதீனமான உயிர்தப்பியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொல்பிட்டிய தொடக்கம் அத்துருகிரிய வரையான பகுதியில் ஏற்பட்டுள்ள தொழினுட்ப கோளாறு காரணமாக, துல்ஹிரிய, ரம்புக்கன மற்றும் கேகாலை ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# உதவிக்குத் தயார்!

## இராணுவம் அறிவிப்பு

கொழும்பு, மே 21

மழையுடன் கூடிய வானிலை நிலவி வருவதால், அனர்த்தங்கள் ஏற்படக்கூடியப் பிரதேசங்களுக்கு உதவிகளை வழங்க இராணுவம் தயாராகவுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அதபத்து தெரிவித்துள்ளார்.

மேலும் அதிகளவு மழை வீழ்ச்சி பதிவாகும் பிரதேசங்களை அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தினூடாக அறிந்து, உதவிகள் தேவைப்படும் பட்சத்தில் வழங்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களுடன் காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும்150 மில்லி மீற்றருக்கு அதிகளவில் மழை பெய்யக்கூடிய சாத்திய நிலை காணப்படுவதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது. (அ)

# வாக்குறுதிகள் காற்றில்: மீண்டும் வேலைநிறுத்தம்



கொழும்பு, மே 21

இரண்டு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட உள்ளதாக, தபால் மற்றும் தொலைத் தொடர்பு அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த ஜனவரி மாதம் நடத்தத் தீர்மானித்திருந்த வேலை நிறுத்தப் போராட்டம், அமைச்சர் சரத் அமுனுகமவின் வாக்குறுதியை அடுத்துக் கைவிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் அந்தச் சந்தர்ப்பத்தில், வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எவையும்இதுவரை நிறைவேற்றப்படவில்லை என, அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் எதிர்வரும் ஜூன் 3, 4ஆம் திகதிகளில் மீண்டும் வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாக, அந்தச் சங்கம் அறிவித்துள்ளது. (அ)

# மித வேகத்தில் பயணியுங்கள்



கொழும்பு, மே 21

அதிவேக வீதிகளில் மணிக்கு 60 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிப்பதுடன், வாகனங்களின் பிரதான விளக்குகளை ஒளிரவிட்டு செலுத்துமாறும் வீதிகள் அபிவிருத்தி அதிகார சபை அறிவுறுத்தியுள்ளது.

தற்போது நிலவும் மழையுடன் கூடிய வானிலை காரணமாக, ஏற்படும் வாகன விபத்துக்களைத் தடுப்பதற்காகவே, வாகனச் சாரதிகளுக்கு இவ்வறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கண்புரை நோயாளிகளுக்கு இலவச சத்திர சிகிச்சை

யாழ்ப்பாணம், மே 21


இராணுவத்தின் யாழ். மாவட்டக் கட்டளைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் . கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்ட கண்புரை நோயாளர்களுக்கான இலவச சத்திர சிகிச்சை திட்டத்துக்கு இது வரையில் 60 நோயாளர்கள் பயனாளிகளாக விபரங்களைப் பதிவு செய்து உள்ளனர்.

சத்திர சிகிச்சைக்கு முன்னரான பரிசோதனைகள் இம்மாத இறுதியில் தென்னிலங்கை, இந்தியா ஆகியவற்றைச் சேர்ந்த வைத்திய நிபுணர்களின் பங்கேற்புடன் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட உள்ளது. இந்த நிலையில் இத்திட்டத்தில் பயனாளிகளாக இணைய விரும்புவோர் தமது விபரங்களை விரைவாகப் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

முன்பரிசோதனைகள் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட பின்னர் நோயாளர்கள் கட்டம் கட்டமாக கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டு சத்திர சிகிச்சை வழங்கப்பட்டு பராமரிக்கப்பட்டு மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்படுவார்கள்.

இது வரையில் பதிவுகளை மேற்கொள்ள தவறியோர் 0702095920 என்கிற தொலைபேசி இலக்கத்துடன் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு கோரப்படுகின்றனர். (அ)

# கடைசி ஓவரில் வைத்து பஞ்சாப்பை துரத்தியது சென்னை




புனே, மே 21

கடைசி ஓவரில் வைத்து பஞ்சாப் அணியை வீழ்த்தியது சென்னை அணி.

ஐபிஎல் தொடரின் 56ஆவது மற்றும் கடைசி லீக் புனேயில் உள்ள மகாராஷ்டிரா கிரிக்கெட் சங்க மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

இதில், கிங்ஸ் லெவன் பஞ்சாப் - சென்னை சூப்பர் கிங்ஸ் அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணியின் கேஎல் ராகுல், கிறிஸ் கெய்ல் ஆகியோர் தொடக்க வீரர்களாகக் களம் இறங்கினார்கள். கிறிஸ் கெய்ல் ஓட்டம் எதுவும் எடுக்காமல் லுங்கி நிகிடி பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ஆரோன் பிஞ்சை 4 ஓட்டங்களுடன் வெளியேற்றினார் சாஹர். இந்தத் தொடரில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்த கேஎல் ராகுலை 7 ஓட்டங்களுடன் வெளியேற்றினார் லுங்கி நிகிடி.

இதனால் 16 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 3 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது கிங்ஸ் லெவன் பஞ்சாப். அதன்பின் 4ஆவது விக்கெட்டுக்காக மனோஜ் திவாரியுடன், டேவிட் மில்லர் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி ஓரளவுக்குத் தாக்குப்பிடித்து விளையாடியது. மனோஜ் திவாரி 30 பந்துகளில் 35 ஓட்டங்களும், டேவிட் மில்லர் 22 பந்துகளில் 24 ஓட்டங்களும் எடுத்தனர்.

அதன்பின் வந்த கருண் நாயர் அதிரடியாக விளையாடி 26 பந்துகளில் 54 ஓட்டங்களைச் சேர்க்க கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 19.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 153 ஓட்டங்களைச் சேர்த்தது.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் லுங்கி நிகிடி 4 ஓவர்களில் 10 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்.

பின்னர் 154 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்குடன் களமிறங்கிய சென்னை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக அம்பதி ராயுடு, டு பிளெசிஸ் ஆகியோர் களமிறங்கினர். ராயுடு ஓர் ஓட்டத்துடன், மோகித் சர்மா வீசிய 2ஆவது ஓவரில் ஆட்டமிழந்தார். அவரைத்தொடர்ந்து சுரேஷ் ரெய்னா களமிறங்கினார். 4ஆவது ஓவரை அன்கித் ராஜ்பூட் வீசினார். அந்த ஓவரின் 3ஆவது பந்தில் டு பிளெசிஸ் ஆட்டமிழந்தார், தொடர்ந்து வந்த சாம் பில்லிங்ஸ் முதல் பந்திலேயே போல்டானார்.

இதனால் சென்னை அணி 27 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை இழந்தது. அதன்பின் ரெய்னாவுடன், ஹர்பஜன் சிங் ஜோடி சேர்ந்தார். 6 ஓவர்கள் முடிவில் சென்னை அணி 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 33 ஓட்டங்கள் மாத்திரமே எடுத்தது.

எனினும், களத்தில் நின்ற இருவரும் நிதானமாக விளையாடி ஓட்டங்களைச் சேர்த்தனர். இதனால் 10 ஓவர்களில் சென்னை அணி 57 ஓட்டங்களை எடுத்தது. 11ஆவது ஓவரை அஷ்வின் வீசினார். அந்த ஓவரின் முதல் பந்தில் ஹர்பஜன் சிங் ஆட்டமிழந்தார். அவரைத்தொடர்ந்து தீபக் சஹார் களமிறங்கினார்.

15ஆவது ஓவரை அஷ்வின் வீசினார். அந்த ஓவரின் சஹார் 2 சிக்ஸர் மற்றும் ஒரு பவுண்டரி அடித்தார். சென்னை அணி 15 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 102 ஓட்டங்களை எடுத்தது. அதிரடியாக விளையாடிய சஹார் 20 பந்துகளில் 39 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ஆட்டமிழந்தார். இதில் 3 சிக்ஸர்களும், ஒரு பவுண்டரியும் அடங்கும். அவரைத்தொடர்ந்து அணித்தலைவர் டோனி களமிறங்கினார்.

சென்னை அணியின் வெற்றிக்கு கடைசி 3 ஓவரில் 34 ஓட்டங்கள் தேவைப்பட்டன. சிறப்பாக விளையாடிய ரெய்னா 45 பந்துகளில் அரைச்சதம் அடித்தார். இறுதியில் சென்னை அணி 19.1 ஓவர்களில் 159 ஓட்டங்களைச் சேர்த்தது. இதன்மூலம் 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் சென்னை அணி வெற்றி பெற்றது. டோனி சிக்ஸர் அடித்து அணியை வெற்றி பெற வைத்தார். பஞ்சாப் அணியின் பந்துவீச்சில் அக்னித் ராஜ்பூட், அஷ்வின் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக லுங்கி நெகிடி தெரிவானார்.

இந்தப் போட்டியில் தோற்றதன் மூலம் பஞ்சாப் அணி, தொடரை விட்டு வெளியேறியது. இந்தப் போட்டியின் வெற்றி - தோல்வியடிப்படையில் தனது அடுத்த சுற்றுக்கான வாய்ப்புக்காகக் காத்திருந்த ராஜஸ்தான் அணி, அடுத்த சுற்றில் விளையாடுவதை உறுதி செய்தது.

ஏற்கனவே, அடுத்த சுற்றுக்கு ஹைதராபாத், சென்னை மற்றும் கொல்கத்தா அணிகள் தகுதிபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



# கடற்கரைக் கரப்பந்தாட்டம்: இரு பிரிவுகளில் சாதித்தது யாழ்ப்பாணம்

முல்லைத்தீவு; மே 21

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கடற்கரைக் கரப்பந்தாட்டப் போட்டிகளில் மாகாண சம்பியன்களாகின யாழ் மாவட்ட அணிகள்.


குறித்த போட்டிகளின் இறுதியாட்டங்கள் நேற்று முல்லைத்தீவு கடற்கரையில் இடம் பெற்றன.

ஆண்கள் பிரிவுக்கான இறுதியாட்டத்தில் யாழ். மாவட்ட அணியும் முல்லைத்தீவு மாவட்ட அணியும் மோதின. மூன்று சுற்றுகளைக்கொண்ட இவ்வாட்டத்தில் 21:17, 21:16 என்ற புள்ளிகளைப் பெற்று 2:0 என்ற சுற்றுக் கணக்கில் வெற்றிபெற்று, வட மாகாண சம்பியனாகியது யாழ். மாவட்ட அணி.


இதேவேளை நடைபெற்ற பெண்களுக்கான கடற்கரைக் கரப்பந்தாட்ட இறுதியாட்டத்தில், யாழ். மாவட்ட அணியும் கிளிநொச்சி மாவட்ட அணியும் மோதின.

மூன்று சுற்றுகளைக்கொண்ட இவ்விறுதியாட்டத்தில் 21:16, 21:13 என்ற புள்ளிகளைப்பெற்று 2:0 என்ற சுற்றுக் கணக்கில் வெற்றிபெற்று, மாகாண சம்பியனாகியது யாழ். மாவட்ட பெண்கள் அணி.

இதன்மூலம், கடற்கரைக் கரப்பந்தாட்டத்தில், ஆண்கள் மற்றும் பெண்கள் என இரு பிரிவுகளிலும் யாழ். மாவட்டம் சம்பியன் பட்டத்தைத் தனதாக்கிக்கொண்டது. (ஐ-108)



# மும்பையை வெளியேற்றியது டெல்லி



டெல்லி, மே 21

டெல்லியில் நடைபெற்ற ஐபிஎல் போட்டியில் மும்பை இந்தியன்ஸை வெளியேற்றி அதிர்ச்சி அளித்தது டெல்லி டேர்டெவில்ஸ்.

ஐபிஎல் தொடரின் 55ஆவது ஆட்டம் டெல்லி பெரோஸ் ஷா கோட்லா மைதானத்தில் நடைபெற்றது. மும்பை இந்தியன்ஸ் அணிக்கெதிராக டெல்லி டேர்டெவில்ஸ் நாணயச்சுழற்சியில் வென்று துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

அந்த அணியின் பிரித்வி ஷா, மக்ஸ்வெல் ஆகியோர் தொடக்க வீரர்களாகக் களம் இறங்கினார்கள். பிரித்வி ஷா 12 ஓட்டங்களிலும், மக்ஸ்வெல் 22 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த அணித்தலைவர் ஷ்ரேயாஸ் அய்யர் 6 ஓட்டங்களில் ஏமாற்றம் அளித்தார்.

ரிஷப் பந்த் அதிரடியாக ஆடி 44 பந்துகளில் தலா 4 பவுண்டரி, 4 சிக்சருடன் 64 ஓட்டங்கள் குவித்தார். அடுத்து வந்த விஜய் சங்கர், அபிஷேக் ஷர்மா முறையே 43 ,15 ஓட்டங்களும் அடிக்க டெல்லி டேர்டெவில்ஸ் 20 ஓவரில் 174 ஓட்டங்கள் எடுத்தது.

மும்பை இந்தியன்ஸ் அணி சார்பில் குருணால் பாண்ட்யா, பும்ரா, மயங்க் மார்க்கண்டே ஆகியோர் தலா ஒரு விக்கெட் எடுத்தனர்.

இதையடுத்து, 175 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மும்பை இந்தியன்ஸ் துடுப்பாட்டம் செய்தது. அந்த அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக சூர்யகுமார் யாதவ், எவின் லெவிஸ் களமிறங்கினர்.

எவின் லெவிஸ் மட்டும் பொறுப்புடன் ஆடி 31 பந்துகளில் 4 சிக்சர், 3 பவுண்டரியுடன் 48 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இறுதியில் பென் கட்டிங் 20 பந்துகளில் 3 சிக்சர், 2 பவுண்டரியுடன் போராடி 37 ஓட்டங்கள் எடுத்தார். மற்ற வீரர்கள் யாரும் நிலைத்து நின்று ஆடவில்லை.

இறுதியில், மும்பை இந்தியன்ஸ் அணி 19.3 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 163 ஓட்டங்களை எடுத்து 11 ஓட்டங்களால் தோல்வி அடைந்து போட்டியில் இருந்து வெளியேறியது.

டெல்லி அணி சார்பில் லாமிச்சென், ஹர்ஷர் படேல், அமித் மிஷ்ரா ஆகியோர் தலா 3 விக்கெட் வீழ்த்தினர்.

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 21.05.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.